**செய்தி வெளியீடு எண்:559** **நாள்: 29.08.2017**

## செய்தி வெளியீடு

திரு. த. மாரியப்பன் அவர்களுக்கு மத்திய அரசு அர்ஜுனா விருது வழங்கியதையடுத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (29.8.2017) திரு. மாரியப்பன் அவர்களுக்கு அனுப்பிய வாழ்த்து கடிதத்தின் விபரம்:

‘‘2016-ம் ஆண்டு பிரேசில் நாட்டில், நடைபெற்ற பாரா ஒலிம்பிக்ஸ் போட்டியில், உயரம் தாண்டுதலில் தங்கப் பதக்கம் வென்ற தங்களுக்கு இந்திய அரசு “அர்ஜுனா’’ விருது வழங்கியதை அறிந்து நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தியாவிலேயே முதன் முறையாக பாரா ஒலிம்பிக்ஸ் உயரம் தாண்டுதல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்று இந்திய நாட்டிற்கும், தமிழ் நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ள தங்களுக்கு இந்திய அரசின் “பத்மஸ்ரீ’’ விருதைத் தொடர்ந்து, ‘‘அர்ஜுனா’’ விருது கிடைத்ததற்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவிப்பதோடு, இடையூறுகளைத் தாண்டி வெற்றிகள் பல பெற்று சாதனை படைக்க விரும்பும் அனைவருக்கும், தாங்கள் நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்கிறீர்கள் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்..’’

*******

**வெளியீடு : இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத் துறை, சென்னை .9.**

**நாள் : 29.8. 2017**